**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்: 100** **நாள்: 19.07.2018**

**சென்னை சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரூ.1.36 கோடி மதிப்பீட்டில் 15000 சதுர அடியில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்காக புதியதாக அமைக்கப்பட்டு வரும் சிறப்பு சென்சாரி பூங்கா மற்றும் ரூ.2.06 கோடி மதிப்பீட்டில் குழந்தைகளுக்கு போக்குவரத்து விதிகளை கற்பிக்கும் விதமாக புதியதாக அமைக்கப்பட்டு வரும் சிறப்பு டிராபிக் பூங்கா ஆகியவற்றில் நடைபெற்று வரும் பணிகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட காளியம்மன் கோயில் தெரு, காமராஜர் சாலை, காந்தி சாலை, வளசரவாக்கம் ஹாஸ்பிட்டல் சாலை, பெருங்குடி 4வது பிரதான சாலை, குருநானக் சாலை மற்றும் சாந்தோம் பிரதான சாலை ஆகிய பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் மற்றும் சென்னை சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரூ.3.42 கோடி மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டு வரும் சிறப்பு சென்சாரி பூங்கா மற்றும் டிராபிக் பூங்கா ஆகியவற்றில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.07.2018) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் பேருந்து சாலைகள் துறைகள் மூலமாக காளியம்மன் கோயில் தெருவில் மேற்கொள்ளப்பட்டு சாலை வெட்டு மறுசீரமைப்பு பணி மற்றும் அகலப்படுத்தும் பணி, மழைநீர்வடிகால் துறை மூலமாக காளியம்மன் கோயில் தெரு, காமராஜர் சாலை மற்றும் காந்தி சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி,

கட்டடங்கள் துறை சார்பாக வளசரவாக்கம் மண்டலம், ஹாஸ்பிட்டல் சாலையில் உள்ள நகர்ப்புற சமூக சுகாதார மையம் மற்றும் பெருங்குடி மண்டலம், 4வது பிரதான சாலையில் 100 படுக்கைகளுடன் கூடிய நகர்ப்புற சமூக சுகாதார மையம், சி.எஸ்.ஐ.ஆர்-ல் மேற்கொள்ளப்பட்டு வரும் நடைபாதை பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, சென்னை சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரூ.1.36 கோடி மதிப்பீட்டில் 15000 சதுர அடியில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்காக புதியதாக அமைக்கப்பட்டு வரும்

சென்சாரி பூங்கா மற்றும் ரூ.2.06 கோடி மதிப்பீட்டில் குழந்தைகளுக்கு போக்குவரத்து விதிகளை கற்பிக்கும் விதமாக புதியதாக அமைக்கப்பட்டு வரும் டிராபிக் பூங்கா ஆகியவற்றில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரூ.10 கோடி மதிப்பீட்டில் 8 பூங்காக்கள் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, அவற்றில் ஜீவா பூங்கா மற்றும் நடேசன் பூங்கா ஆகியவை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களால் 11.07.2018 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

மேலும், சென்னை சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரூ.3.42 கோடி மதிப்பீட்டில் புதியதாக சென்சாரி பூங்கா மற்றும் டிராபிக் பூங்கா ஆகிய 2 சிறப்பு பூங்காக்கள் அமைக்கும் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்காக தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-126, சாந்தோம் பிரதான சாலையில் பிரத்யேகமாக 15000 சதுர அடியில் ரூ.1.36 கோடி மதிப்பீட்டில் புதியதாக சிறப்பு சென்சாரி பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பூங்காவில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட உபகரணங்களுடன் கூடிய குழந்தைகள் விளையாட்டு மைதானம், டேக்டைல் பதியப்பட்ட நடைபாதை, பலவித வாசனை உணர்வுகள் கொண்ட ஹெர்பல் கார்டன், நடுநிலை நடைமேடை, கண்காணிப்பு கோமராக்கள், மழைநீர் சேகரிப்பு அமைப்பு, கூடைப்பந்து மைதானம், 8 நடைபாதைகள், பல்லாங்குடி, ஆடுபுலி ஆட்டம் போன்ற பாரம்பரியமிக்க விளையாட்டு மேடை, மணல் மேடை விளையாட்டு, சுவர்களில் சித்திரம் வரைதல், Braille Signage, மாற்றுத்திறனாளி குழந்தைகள் பயன்படுத்த பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட கழிவறை மற்றும் அமரும் இருக்கைகள் போன்ற சிறப்பு அம்சங்களுடன் பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக குழந்தைகளுக்கு போக்குவரத்து விதிகளை கற்பிக்கும் விதமாக, ரூ.2.06 கோடி மதிப்பீட்டில் 44200 சதுர அடி பரப்பளவில் தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-114, காமராஜர் சாலை, நேப்பியர் பாலம் அருகில் புதியதாக சிறப்பு டிராபிக் பூங்கா அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்தப் பூங்காவில் போக்குவரத்து விதிகளை கற்பிக்கும் வழிகாட்டிப் பலகை, கான்கிரீட் மாதிரி சாலை அமைத்தல், நடைபாதை அமைத்தல், அலுவலக அறை மற்றும் ஒலி, ஒளி விளக்கத்துடன் கூடிய கலந்தாய்வு அரங்கம், மாதிரி பேருந்து நிழற்குடை, மாதிரி சமிக்ஞைகள்,

திறந்தவெளி அரங்கம், குழந்தைகள் விளையாட்டு அரங்கம், எல்.இ.டி. விளக்கு பலகைகள், வாகன நிறுத்தம், குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதி, நிழற்குடை, குழந்தைகள் விளையாட்டுத் திடல், திறந்தவெளி உடற்பயிற்சி உபகரணம், பசுமை புல்தரை மற்றும் ஆர்.ஓ. குடிநீர் வசதி போன்ற சிறப்பு அம்சங்களுடன் பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்தப் பூங்காக்களில் நடைபெற்று வரும் பணிகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை அக்டோபர் மாத இறுதிக்குள் முடிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் டாக்டர் சுபோத் குமார், இ.ஆ.ப அவர்கள் முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி, தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) திரு.என்.மகேசன், மேற்பார்வை பொறியாளர் (பூங்காக்கள்) திரு.எஸ்.காளிமுத்து, மேற்பார்வை பொறியாளர் (கட்டடங்கள்) திரு.கே.சின்னசாமி, மேற்பார்வை பொறியாளர் (சிறப்பு திட்டங்கள்) திரு.எல்.நந்தகுமார் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**